**O.S. No. 212 /2022**

**Date:18.04.2026**

**வா.சா.1 குருசாமி**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனது தந்தை பெயர் சீனித் தேவர். எனது தந்தைக்கு நான், பொன்னுத்தேவர், பிரதிவாதி ஆகியோர்கள் வாரிசுகள் ஆவோம் . பொன்னுத் தேவர் இறந்து விட்டார். பொன்னுத் தேவருக்கு அவரது மனைவி சரஸ்வதி, மற்றும் வெள்ளத்துரைச்சி , பரமகுரு ஆகியோர்கள் வாரிசுகள் ஆவார்கள். நானும், பொன்னுத்தேவரும் வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொள்ளும்போது பிரதிவாதிக்கு சொத்துக்கள் பற்றி சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். தபசில் சொத்துக்கள் அரசுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அரசாங்கம் எங்களுக்கு செட்டில்மெண்ட் பட்டாவோ, ஒப்படைப்பு பட்டாவோ வழங்கவில்லை என்றால் சரிதான். மேற்படி பட்டா எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாய்மொழி பாகம் செய்த பின்னர் சொத்ததானது அரசாங்கத்திற்கு சொந்தமானது என்பதால் நாங்கள் அதற்கு பட்டா மாற்றம் செய்யவில்லை என்றால் சரிதான். பொன்னுத்தேவரின் வாரிசுகளை இந்த வழக்கில் நான் கட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் நான் எந்த வருடத்தில் வீடு கட்டினேன் என்றால் 1972 ல் வீடு கட்டினேன். மேற்படி வீட்டிற்கு தீர்வை ரசீது மற்றும் மின் கட்டண ரசீது செலுத்தியதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தீர்வை செலுத்தவில்லை. மேற்படி 1972 முதல் தபசில் சொத்தில் வீடு இருந்ததை காட்டுவதற்காக தீர்வை போன்ற ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பிராதில் நான் எப்போது வீடு கட்டினேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி வீடானது வாய்மொழி பாகத்தில் கிடைக்கப்பெற்றதாக சொல்லியுள்ள நிலையில் வீட்டிற்கு கிழமேல் அளவு, தென்வடல் அளவு குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி வீடு கட்டிய காலத்தில் இருந்து தீர்வை ரசீது என் பெயரில் தான்

இருந்து வருகிறது. மேற்படி வீட்டிற்கு தீர்வையும், மின் கட்டண ரசீதும் நான் தான் செலுத்தி வருகிறேன். நான் வீட்டிற்கு தீர்வை ரசீது , மற்றும் மின் கட்டண ரசீதும் செலுத்தி வரும் நிலையில் ஏன் மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் தீர்வையை நான் கட்டவில்லை. வா.சா.ஆ.4 ஆவணம் பிரதிவாதி ஆஜராகாமல் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவின்பேரில் செலுத்தப்பட்டுள்ளது என்பதால் அது ஏற்கத்தக்க ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி தீர்வைக்கு பெயர் மாற்றம் செய்தது இந்த நீதிமன்றத்தில் பிறந்த ஒருதலைபட்ச உத்தரவின்பேரிலா என்றால் சரியல்ல அதற்கு முன்னரே மாற்றம் செய்து விட்டேன். தபசில் சொத்தின் வீட்டின் கதவு எண் எனக்கு தெரியாது. பிராதில் மேற்படி வீட்டின் கதவு எண்ணை சொல்லி நான் பிராதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் சிட்டாவிற்கு முன்னர் தபசில் சொத்து யார் பெயரில் இருந்தது என்பதை காட்டுவதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு முன்னர் தபசில் சொத்து யார் பெயரிலும் இல்லை. நாளது தேதி வரையிலும் என் பெயரிலும், பொன்னுத் தேவர் பெயரிலும் தான் சிட்டா உள்ளது என்றால் சரிதான். எனது தங்கைக்கு வயது என்ன என்று கேட்டால் சுமார் 65 வயது இருக்கும். எனது தங்கைக்கு 23 வயதில் திருமணம் செய்து வைத்தோம். எனது தங்கை திருமணம் ஆகி அவருடைய கணவருடன் ஒருவருடம் வசித்து வந்தார். அதன் பின்னர் ஊருக்கு வந்துவிட்டு தபசில் சொத்தில் உள்ள வீட்டில் தான் குடியிருந்து வருகிறார். தபசில் சொத்தில் உள்ள வீட்டில் மின் இணைப்பு உள்ளது. அதற்கான மின் இணைப்பு எண்ணை பிராதில் குறிப்பிடவில்லை. மேற்படி மின் இணைப்பு பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் மின் கட்டணம் செலுத்துவதில்லை. மின் கட்டணம் பிரதிவாதி பெயரில் தான் உள்ளது. நாளது தேதிவரையில் பிரதிவாதி பெயரில் அரசால் மின் கட்டணம் செலுத்தப்பட்டு மின் கட்டண ரசீது வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதிக்கு மத்திய அரசின் இந்திரா காலனி குடியிருப்பு வீடு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. தபசில் சொத்து அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்டது என்பதால்

பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டு அவரின் பெயரில் மின் கட்டணம் செலுத்தப்பட்டு பிரதிவாதியின் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. அதன் பின்னர் குடிசை வீடுகளை கான்கீரிட் வீடுகளாக மாற்றும் திட்டத்தின் கீழ் பிரதிவாதிக்கே வீடு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதி தபசில் சொத்தில் 50 ஆண்டுகளாக தீர்வை மற்றும் மின் கட்டணம் செலுத்தி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் தபசில் சொத்துக்களை மோசம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் ஆவணங்களை உருவாக்கி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நாளது தேதிவரையிலும் தபசில் சொத்தில் உள்ள வீடானது கலிங்கப்பட்டி பஞ்சாயத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள சிட்டா அதனை தொடர்ந்துள்ள ஆவணங்கள் அடிப்படையில் தபசில் சொத்தில் எனக்கு எந்தவித உரிமையும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/-P.Mahindra Varma
Subordinate Judge,
Sankarankovil.